புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்
• திருவள்ளுவர் ஆண்டு 2055 • பிப்ரவரி 29, 2024 • புரட்சி 24 • முழக்கம் 07 • விலை ரூ.3.00



## தமிழ்நாட்டை முந்துகிறதா உத்தரப் பிரதேசம்?
# சங்கிகளின் பொய்யுரைகளை அம்பலப்படுத்துவோம்

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இந்தியாவில் இரண்டாவது பெரிய மாநிலமாக தமிழ்நாடு இருக்கிறது. ஆனால் தமிழ்நாட்டை பின்னுக்குத்தள்ளி உத்தரப் பிரதேசம் இரண்டாவது இடத்தை பிடித்துவிட்டதாக, பாஜகவினர் சமூக ஊடகங்களில் பொய்ச்செய்தி ஒன்றை பரப்பினர். இதுபோன்ற கட்டுக்கதைகளை அவிழ்த்துவிட்டுதான் "குஜராத் மாடல்" என்ற போலி பிம்பத்தை உருவாக்கினார்கள். அந்த பிம்பம் இப்போது சுக்குநூறாக உடைந்துவிட்டதால் "உ.பி. மாடல்" என்ற ஒன்றுக்கும் உதவாத மாடலை போலிச் செய்திகளால் கட்டமைக்க பாஜகவினர் முயற்சிக்கிறார்கள். உண்மையில் தமிழ்நாட்டின் வளர்ச்சி என்ன? உத்தரப் பிரதேசத்தின் வளர்ச்சி என்பதற்கான சிறு ஒப்பீட்டை இங்கு காணலாம்.

2024-25 நிதியாண்டுக்கான ஒன்றிய பட்ஜெட் மதிப்பீட்டின்படி, ஒன்றிய நிதிப் பகிர்வில் தமிழ்நாட்டுக்கு கிடைக்கப் போகிற தொகை 49,754.95 கோடி ரூபாய். ஆனால் உத்தரப் பிரதேசத்துக்கு கிடைக்கப் போகிற தொகையோ 2,18,816.84 கோடி ரூபாய்.

ஒன்றியத்துக்கு வரியாகச் செலுத்தும் ஒவ்வொரு ரூபாய்க்கும் 29 பைசா மட்டுமே திரும்பப் பெறுகிறது தமிழ்நாடு. ஆனால் உத்தரப் பிரதேசமோ 2.73 ரூபாயாக பெறுகிறது.

ஒன்றிய அரசின் நிதிப் பகிர்வில் தமிழ்நாட்டின் பங்கு கடந்த 20 ஆண்டுகளில் 5.38% இல் இருந்து 4.18% ஆக குறைந்திருக்கிறது. அதாவது 20 ஆண்டுகளில் 22% இழந்திருக்கிறோம். ஆனால் உத்தரப் பிரதேசமோ 19.79%-இல் இருந்து 17.93%ஆக மட்டுமே இழந்திருக்கிறார்கள். இழப்பு 9% மட்டுமே.

இவ்வளவு அதிகமான நிதியை கால் நூற்றாண்டாக பெற்றுக் கொண்டிருக்கும் உத்தரப் பிரதேசம் கல்வி, வேலைவாய்ப்பு, சுகாதார நிலைகளில் எவ்வளவு மேம்பட்டிருக்க வேண்டும்?

தமிழ்நாட்டின் தனிநபர் வருமான வளர்ச்சியை விட உ.பி.-யின் தனிநபர் வருமான வளர்ச்சி 2% அதிகமாக இருக்கிறது. உ.பி.-யின் தனிநபர் வருமான வளர்ச்சி இதே வேகத்தில் இருந்தால்கூட தமிழ்நாட்டின் தனிநபர் வருமான வளர்ச்சியை எட்ட இன்னும் 62 ஆண்டுகள் ஆகும். ஏனென்றால் தமிழ்நாட்டின் தனி நபர் வருமானத்தை விட உத்தரப் பிரதேசத்தின் தனிநபர் வருமானம் இரண்டு மடங்குக்கு மேல் குறைவாக உள்ளது.

2022-23 நிதியாண்டில் தமிழ்நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 24.39 லட்சம் கோடி ரூபாய். ஆனால் 20 கோடிக்கும் அதிகமான மக்கள் தொகையைக் கொண்டிருக்கிற உத்தரப் பிரதேச மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 22.57 கோடி ரூபாய்தான். 2023-24 நிதியாண்டின் தமிழ்நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 28 லட்சம் கோடி ரூபாயை தாண்ட போகிறது. உத்தரப் பிரதேசமோ 24 லட்சம் கோடி ரூபாயை மட்டுமே எட்ட போகிறது.

பல பரிமாண வறுமைக் குறியீடு (MPI) கோட்டிற்கு கீழ் தமிழ்நாட்டில் வாழ்பவர்கள் 1.47% மட்டுமே. ஆனால் உத்தரப் பிரதேசத்திலோ 17.40% உள்ளனர்.

தமிழ்நாட்டில் பெண்கள் உயர்கல்வி சேர்க்கை விகிதம் 47.3%. இது ஆண்களை விட 0.1% அதிகம். ஆனால் உத்தரப் பிரதேசத்தில் பெண்கள் உயர்கல்வி சேர்க்கை விகிதம் இதில் பாதியாகத்தான் உள்ளது.

ஆயிரம் பேருக்கு ஒரு மருத்துவர் என்பதுதான் உலக சுகாதார அமைப்பின் இலக்கே. ஆனால் தமிழ்நாட்டில் 4 மருத்துவர்கள் இருக்கின்றனர். இது ஸ்கேண்டி நேவியன் நாடுகளுக்கு இணையானது. உத்தரப் பிரதேசத்திலோ 2,000 பேருக்கு ஒரு மருத்துவர் கூட இல்லாத அவலம் நீடிக்கிறது.

தமிழ்நாட்டுடன் அல்ல, இந்தியாவின் தேசிய சராசரியுடன் கூட போட்டியிட முடியாத நிலையில்தான் உத்தரப் பிரதேசத்தை பாஜக ஆட்சி வைத்திருக்கிறது. ஆனால் போலியான தரவுகளை உருவாக்கி, உயர்ந்த மாநிலம் போன்ற தோற்றத்தை உருவாக்க பார்க்கிறார்கள். ஒன்றிய அரசின் வரிப்பகிர்வில் பெரும் நிதியை வாங்கிக்கொண்டும், அந்த மக்களின் முன்னேற்றத்திற்கு செலவிடாமல், நிதி முறைகேட்டில் பாஜக அரசு ஈடுபடுவதால்தான் வளர்ச்சி தடைபட்டிருக்கிறது என்பதே உண்மை.

# ஊழல் கறையைப் போக்கும் அதிநவீன வாஷிங்மெசின் பாஜக

எதிர்க்கட்சியில் இருக்கும்போது பாஜகவால் தீவிரமான ஊழல் குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாக்கப்பட்டவர்கள், அமலாக்கத்துறை- வருமான வரித்துறை போன்ற ஒன்றிய அரசின் விசாரணை அமைப்புகளால் சோதனைகளுக்கும், விசாரிப்புகளுக்கு உள்ளானவர்கள் பாஜகவில் இணைந்துவிட்டாலோ அல்லது பாஜக ஆதரவாளர்கள் ஆகிவிட்டாலோ அவர்கள் மீதான மோசடி குற்றச்சாட்டுக்களும் ஒரு நொடியில் பறந்துவிடும், பிறவிப் புனிதர்கள் ஆகிவிடுகிறார்கள். அப்படி பாஜகவின் வாஷிங் மெஷினில் சிக்கி தூய்மையானவர்களின் பட்டியல்.

**பாவனா கவாலி :**



சிவசேனாவை சேர்ந்த இவர், பொது அறக்கட்டளைக்கு சொந்தமான 7 கோடி ரூபாய் பணத்தை முறைகேடு செய்ததாக 2020ஆம் ஆண்டில் அமலாக்கத்துறை வளையத்தில் சிக்கினார். இந்த வழக்கில் சில மாதங்கள் கழித்து இவருக்கு நெருக்கமான சயீத் கான் என்பவர் கைது செய்யப்பட்டார். 2021, 2022-இல் பாவனாவை விசாரிக்க அமலாக்கத்துறை பலமுறை சம்மன் அனுப்பியது. குற்றப்பத்திரிகையில் இவருடைய பெயரும் இருந்தது. ஆனால் 2022 ஜூலையில் ஏக்நாத் ஷிண்டே முகாமில் இணைந்தார் பாவனா. மக்களவையில் ஏக்நாத் ஷிண்டே அணியின் தலைமைக் கொறடாவாகவும் அறிவிக்கப்பட்டார். அதன்பிறகு அமலாக்கத்துறை இந்த வழக்கில் கூடுதல் குற்றப்பத்திரிகையும் தாக்கல் செய்யவில்லை. பாவனாவை விசாரிக்கவும் இல்லை.

**ஹசன் முஷ்ரிப் :**

தேசியவாத காங்கிரஸ் கட்சியை சேர்ந்த இவரின் வீடு, மும்பை மற்றும் கோல்காபூரில் உள்ள அலுவலகங்களில் 2023 மார்ச்சில் பணமோசடி குற்றச்சாட்டில் அமலாக்கத்துறை சோதனை நடத்தியது. ஹசன் முஷ்ரின் எந்தெந்த தொழிலில் என்னென்ன முறைகேடு செய்தார் என்றெல்லாம்



மராட்டிய பாஜக தலைவர் கிரித் சோமையா மிகப்பெரிய குற்றச்சாட்டு பத்திரமே வாசித்தார். தேசியவாத காங்கிரஸ் கட்சியை உடைத்து, அஜித் பவார் பாஜகவுடன் இணைந்தபோது ஹசன் முஷ்ரிப்பும் அவருடைய அணியில் இணைந்தார். அதன்பிறகு இந்த வழக்கில் சிறு துரும்பைக் கூட கிள்ளிப்போடவில்லை அமலாக்கத்துறை. அஜித் பவாரும் பாஜகவின் சலவை இயந்திரத்தில் புகுந்து ஏற்கெனவே தன்னை தூய்மையாக்கிக் கொண்டவர். தற்போது இரண்டாவது முறையாக தன்னை தூய்மையாக்கிக் கொண்டதோடு, மேலும் சிலரையும் தூய்மையாக்கி விட்டிருக்கிறார்.

**திகம்பர் காமத் :**




கோவாவின் முன்னாள் முதல்வரான திகம்பர் காமத்தும், அவரது அமைச்சரவையில் பொதுப்பணிகள் துறை அமைச்சராக இருந்த சர்ச்சில் அலேமாவோவும் லஞ்சம் வாங்கியதாக 2015-இல் விசாரணை தொடங்கப்பட்டது. முதலில் சிபிஐ-யும் பின்னர் அமலாக்கத்துறையும் இந்த வழக்கை விசாரித்தன. 14 ஷெல் கம்பெனிகளிடம் லஞ்சம் வாங்கியிருப்பதாக முதல் தகவல் அறிக்கையிலும் குறிப்பிடப்பட்டது. 2021-இல் மீண்டும் இந்த வழக்கை வேகப்படுத்தியது அமலாக்கத்துறை. ஆனால் 2022 செப்டம்பரில் திகம்பர் காமத் மேலும் சில எம்.எல்.ஏ.க்களுடன் காங்கிரஸில் இருந்து விலகி பாஜகவில் இணைந்தார். அதன்பிறகு இந்த வழக்கு என்ன ஆனது என்றே தெரியவில்லை.

**சி.எம்.ரமேஷ் & ஒய்.எஸ்.சவுத்ரி :**



தெலுங்கு தேசம் மாநிலங்களவை எம்.பி.க்களான இருவரும் மற்ற சில தொழிலதிபர்களுடன் சேர்த்து சி.பி.ஐ., வருமான வரித்துறை, அமலாக்கத்துறை கண்காணிப்பில் இருந்தனர். இருவரும் ஆந்திர மல்லையாக்கள் என பாஜக நிர்வாகி நரசிம்ம ராவ் குற்றம்சாட்டியிருந்தார். இருவர் மீதும் நடவடிக்கை எடுக்கக்கோரி மாநிலங்களவை நெறிமுறைக்குழுவுக்கும் இவர் கடிதம் அனுப்பினார். ஆனால் இவர்கள் இருவரோடு சேர்த்து தெலுங்குதேசம் கட்சியின் 4 மாநிலங்களவை உறுப்பினர்கள் சில மாதங்களுக்கு பாஜகவில் இணைந்தனர். பாஜகவின் வாஷிங் மெஷின் இவர்களையும் தூய்மையானவர்கள் ஆக்கிவிட்டது.

**சுவேந்து அதிகாரி :**



திரிணாமுல் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சுவேந்திர அதிகாரிக்கு, நாரதா ஸ்டிங் ஆபரேசன் வழக்கில் 2017ஆம் ஆண்டில் அமலாக்கத்துறை பலமுறை சம்மன் அனுப்பியது. பாஜகவினரும் இவர் மீதான ஊழல் குற்றச்சாட்டுக்களை அடுக்கினர். ஆனால் 2020ஆம் ஆண்டில் இவர் பாஜகவில் இணைந்தார். 2021 சட்டமன்றத் தேர்தலின்போது மம்தா பானர்ஜிக்கு எதிராக, நந்திகிராம் தொகுதியில் இவர்தான் வேட்பாளராக நிறுத்தப்பட்டார், வெற்றியும்

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

தலையங்கம்

## முன்னேறுகிறது இந்தியா; சறுக்குகிறது பாஜக

தேர்தல் காலங்களில் கருத்துக் கணிப்புகள் வெளியிடப்படுவது வாடிக்கையான ஒன்றுதான். ஆனால் சிபிஐ, அமலாக்கத்துறை, வருமான வரித்துறை, தேர்தல் ஆணையங்கள், நீதிமன்றங்கள் என பாஜகவின் கட்டுப்பாட்டில் பல துறைகள் இருப்பதைப் போல ஊடகத் துறையும் ஒன்றாக கலந்துவிட்டன. கருத்துக் கணிப்புகள் என்ற பெயரில் கருத்துருவாக்கத்தை கட்டமைப்பதையே பல ஊடகங்கள் செய்கின்றன. 10 ஆண்டுகால பாஜக ஆட்சியில் வேலையின்மை, விலைவாசி உயர்வு பிரச்னைகள் மக்களை வாட்டி வதைக்கிறது. விளைபொருட்களுக்கு உரிய விலை கேட்டு டெல்லியை நோக்கிச் செல்லும் விவசாயிகள் மீது மும்முனைகளில் இருந்து தாக்குதல் நடத்திக் கொண்டிருக்கிறது ஒன்றிய பாரதிய ஜனதா அரசு. காவல்துறை லத்திகளால் கடும் காயங்களை சந்தித்திருக்கிறார்கள் விவசாயிகள். கண்ணீர் புகைக் குண்டுகளை வீசி, காற்றின் வழியாகவும் நிலைகுலையைச் செய்திருக்கிறார்கள். டிரோன்களை பறக்கவிட்டு, அதில் இருந்து ரப்பர் குண்டு மழை பொழிந்து விவசாயிகளின் உடல்களை குத்திக் கிழித்திருக்கிறார்கள். இதுவரை 3 விவசாயிகள் இறந்திருக்கிறார்கள்.

உற்பத்தித் துறை, ஏற்றுமதித் துறை, சேவைத்துறை என அனைத்து துறைகளிலும் பெரு நிறுவனங்கள் மட்டுமே லாபம் கொழிக்கின்றன. சிறு குறு நடுத்தர நிறுவனங்கள் தள்ளாடிக் கொண்டிருக்கின்றன. 10 ஆண்டுகால பாஜக ஆட்சியில் ஏழைகள் மேலும் ஏழையாகி இருக்கிறார்கள். பணக்காரர்கள் மென்மேலும் பணக்காரர்கள் ஆகியிருக்கிறார்கள். இந்த அதிருப்தி நாடு முழுவதும் கனலாய் தகித்துக் கொண்டிருக்கிறது. ஆனால் நாட்டு மக்கள் அனைவரும் செல்வ செழிப்போடு, சகல வசதிகளுடன் வாழ்ந்து கொண்டிருப்பதைப் போல கருத்துருவாக்கத்தை கட்டமைக்கிற முயற்சியில் இந்தியா டுடே, என்.டி.டி.டிவி போன்ற சில ஊடகங்கள் இறங்கியிருக்கின்றன.

தமிழ்நாட்டிலும் புதிய தலைமுறை ஊடகம் ஒரு கருத்துத்திணிப்பை வெளியிட்டிருக்கிறது. தமிழ்நாட்டில் பாஜக 3 முதல் 5 தொகுதிகளில் வெல்லும் என்றும், 18.48% வாக்குகளைப் பெறும் என்றும் கருத்துக்கணிப்பை வெளியிட்டிருக்கிறது புதிய தலைமுறை ஊடகம். அதிமுகவும் கூட்டணியில் இல்லை, சொல்லிக்கொள்ளும்படியான பெரிய கட்சியும் ஒன்றுகூட இல்லை... ஆனால் 18% வாக்குகள், 5 தொகுதிகள் என்று சொன்னால் பாஜகவினரே சிரிப்பார்கள். இருந்தாலும் இப்படியொரு கருத்துத் திணிப்பை செய்திருக்கிறது புதிய தலைமுறை ஊடகம். வடநாட்டிலேயே பாஜகவின் செல்வாக்கு சரிந்து கொண்டிருக்கிறது என்பதுதான் உண்மை நிலை. ஆம் ஆத்மி, சமாஜ்வாதி, திரிணாமுல் காங்கிரஸ் கட்சிகளோடு தொகுதிப் பங்கீடு செய்வது காங்கிரஸுக்கு முடியாத காரியம், சாத்தியமே இல்லை என்ற கூறிக்கொண்டிருந்த பாஜகவினர், இப்போது சுமூகமாக அங்கெல்லாம் பேச்சுவார்த்தைகள் முன்னேறுவதைக் கண்டு அச்சமடைந்திருக்கிறார்கள்.

இந்தியா கூட்டணி வலுவடைந்திருப்பது மட்டுமே அவர்களின் அச்சத்திற்கு காரணமில்லை. ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி அவய் சுக்லா என்பவர் பாஜகவின் செல்வாக்கு சரிந்திருப்பது குறித்து கட்டுரை ஒன்றை தனது வலைப்பக்கத்தில் எழுதியிருக்கிறார். ஆங்கில ஊடகங்களின் கருத்துத் திணிப்புகளை கேள்விக்குள்ளாக்கும் அந்த கட்டுரை “தி வயர்” ஊடகத்திலும் வெளியாகியிருக்கிறது. “விவசாயிகள் போராட்டத்தால் ஒன்றிய அரசுக்கு ஒரு கடும் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது என்பதை ஊடகங்கள் மறைக்கின்றன. பாஜகவால் ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளானவர்கள், பாஜகவில் இணைந்த பிறகு தூய்மையானவர்கள் ஆகிவிடுவதை பார்த்து மக்கள் குழம்பியிருக்கிறார்கள். சிவசேனா, தேசியவாத காங்கிரஸ் போன்ற கட்சிகளை உடைத்ததை மக்கள் சகித்துக்கொள்ள மாட்டார்கள். பாஜகவின் 303 எம்.பி.க்களில் 134 பேர் மட்டுமே உண்மையான பாஜகவினர். மற்ற எல்லோருமே வேறு கட்சிகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டவர்கள் என்று Knocking News வலைத்தளம் ஆய்வு செய்து கூறியிருக்கிறது. அவசர அவசரமாக பாஜக திணிக்க முயலும் பொது சிவில் சட்டத்தை இந்தி பேசும் மாநில மக்களே விரும்பவில்லை. இந்த எதிர்ப்புகளால் பாஜக குறைந்தபட்சமாக 40 தொகுதிகளையாவது இழக்கும்” என்கிறார் அவர். அஜய் பிரகாஷ் என்பவரின் டிஜிட்டல் மீடியா தரவுகளையும் அதற்கு ஆதாரமாக முன்வைக்கிறார்.

“மிக முக்கியமாக, மேற்கு மற்றும் இந்தி ஹார்ட்லேண்ட் பகுதிகளில் பாஜகவின் செல்வாக்கு பெரிதாகக் கூடவில்லை, தெற்கிலும் கிழக்கிலும் பாஜகவுக்கு எந்தவிதமான முன்னேற்றமும் இல்லை. பிறகு எப்படி பாஜக 400 தொகுதிகளை தாண்டும் என பரப்புகிறார்கள்?” என்பதே அவர் முன்வைக்கும் கேள்வி. பாஜகவை பொருத்தவரை சிறுபான்மையினர் மீதான வெறுப்புணர்வை மூட்டி, அதில் இந்துக்களை அணி திரட்டிவிடலாம் என்பதுதான் அவர்கள் கையிலிருக்கும் ஒரே உத்தி. 2023 ஒரே ஆண்டில் மட்டும் நாடு முழுவதும் இஸ்லாமியர்களுக்கு எதிராக 668 வெறுப்புப் பேச்சுக்கள் பதிவாகியிருக்கின்றன. அதில் 75% (498) பேச்சுக்கள் பாஜக ஆளும் மாநிலங்களில்தான் பதிவாகி இருக்கின்றன என்று வாஷிங்டனை சேர்ந்த ஒரு நிறுவனத்தின் ஆய்வறிக்கை கூறுகிறது.

இதில் மகாராஷ்டிரா, உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், குஜராத், கர்நாடகா, உத்தராகண்ட் ஆகிய மாநிலங்களில் மட்டும் இஸ்லாமியர்களுக்கு எதிராக 500க்கும் மேற்பட்ட வெறுப்புப் பேச்சுக்கள் பதிவாகியிருக்கின்றன. ஆனால் இத்தகைய வெறுப்புப் பேச்சுக்களை வைத்து வெற்றியை நீட்டித்துக்கொண்டே செல்ல முடியாது என்பதற்கு கர்நாடகத் தேர்தலே மிகச் சிறந்த எடுத்துக்காட்டு. வாழ்வாதாரத்தை மீறி மதம் முக்கியமில்லை என்று கர்நாடக மக்கள் முடிவெடுத்தார்கள். கர்நாடக மக்களை விட மிக மோசமான வாழ்வியல் சூழலில் இந்தி பேசும் மாநிலங்கள் இருக்கின்றன. அவர்களும் அதை உணர்ந்து வாக்களித்தால் பாஜக வீழ்வது உறுதி. அது இந்தத் தேர்தல் நடக்கும் என்பதே ஜனநாயக சக்திகளின் நம்பிக்கை. அந்த நம்பிக்கையை வீழ்த்தவே திட்டமிட்ட கருத்துருவாக்கங்கள் செய்யப்படுகின்றன. மக்கள் எச்சரிக்கையோடு இருக்க வேண்டும்!

## சென்னையில் ஆணவப் படுகொலை!

சென்னை : வேளச்சேரி அருகே உள்ள பள்ளிக்கரணையில் பிரவீன் என்கிற ஆசிக் என்ற இளைஞர் 24.02.2024 அன்று ஆணவப் படுகொலை செய்யப்பட்டார்.

தகவலறிந்து சென்னை மாவட்டக் கழகத்தின் அறிவுறுத்தலின் படி மடிப்பாக்கம் பகுதிச் செயலாளர் ம. கி. எட்வின் பிரபாகரன், அட்டி அருண் ஆகியோர் பிரவீனின் உடலுக்கு இறுதி மரியாதை செலுத்திய பின்னர் அவரது இறுதி ஊர்வலத்தில் பங்கேற்றனர்.

இதில் கழகத் தலைமைக்குழு உறுப்பினர் அய்யனார், மக்கள் குடியரசு இயக்க ஒருங்கிணைப்பாளர் ஜான் மண்டேலா ஆகியோர் பங்கேற்றனர்

பின்னர் வழக்கறிஞர் ரமேஷ் பெரியார், அருள் ஜெகன், ஏதுசாமி, மோகன் உள்ளிட்ட தோழர்களை சந்தித்து ஆணவப் படுகொலை செய்யப்பட்டது தொடர்பாக ஆலோசனை நடத்தினார்கள்.

சென்னை போன்ற மாநகரங்களிலேயே ஆணவப் படுகொலை செய்யும் அளவுக்கு ஜாதியவாதிகளுக்கு துணிச்சல் அதிகரித்திருப்பது கவலைக்குரிய ஒன்று. ஆணவப் படுகொலைகளுக்கு எதிரான கடுமையான சட்டத்தை அமல்படுத்த வேண்டியது காலத்தின் கட்டாயம். தமிழ்நாடு அரசு இதுகுறித்து உடனடியாக பரிசீலிக்க வேண்டியது அவசியமாகிறது.

## வினா விடை

• கூட்டணி பேச்சுவார்த்தைக்காக தலைமை அலுவலகத்தில் காத்திருந்த எடப்பாடி பழனிசாமி; யாரும் வராததால் அதிருப்தி **– செய்தி**

*கவலை வேண்டாம்... தங்கமணி, வேலுமணியை ஆளுக்கொரு கட்சி தொடங்கவைத்து பேச்சுவார்த்தைக்கு வரச் சொல்லிவிடலாம்.*

• தமிழ்நாட்டில் இருந்து 39 எம்.பி.க்களை டெல்லிக்கு அனுப்பும் வரை நமக்கு ஓய்வே இல்லை **– அண்ணாமலை**

*39 எம்.பி.க்களை அனுப்பப் போகிற கட்சிக்குத்தானே வேலை? பாஜகவுக்கு என்ன வேலை?*

• ஊழல் கட்சிகளின் ஆட்சிக்கு பூட்டுப்போட மக்கள் முடிவு **– நரேந்திர மோடி**

*ஆமாம்... துவாரகா எக்ஸ்பிரஸ், ஆயுஷ்மான் பாரத், டோல்கேட் ஊழல் செய்த கட்சிக்கு முடிவு கட்டப் போகிறார்கள்.*

• பொதுமக்களுக்கு அளித்த ஒவ்வொரு வாக்குறுதியையும் பாஜக நிறைவேற்றிவிட்டது **– அமித் ஷா**

*கருப்புப் பணத்தை மீட்டு 15 லட்சம் ரூபாய் இன்னும் வரவு வைக்கவில்லையே! மதுரை எய்ம்ஸ் செங்கல்லோடு நிற்கிறதே?*

• இந்தியாவை யாராவது அச்சுறுத்த நினைத்தால் சரியான பதிலடி கொடுப்போம் **– ராஜ்நாத் சிங்**

*“சீனாவைத் தவிர” என்று அடைப்புக்குறிக்குள் போட்டுவிடுங்கள்... அருணாச்சலில் உரிமை கொண்டாடும் சீனாவுக்கு எதிராக சத்தமே இல்லையே!*

## சேலத்தில் பொதுக்கூட்டம் நடத்த உயர்நீதிமன்றம் அனுமதி

சேலத்தில் திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் “சர்வாதிகாரத்தை வீழ்த்துவோம்” என்ற தலைப்பில் பொதுக்கூட்டம் நடத்த அனுமதியளித்து காவல்துறைக்கு உத்தரவிட்டுள்ளது சென்னை உயர் நீதிமன்றம்.

சென்னை : நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்ளவிருக்கும் நிலையில் திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் ‘சர்வாதிகாரத்தை வீழ்த்துவோம்’ என்ற தலைப்பில் சேலம் மேட்டூரில் உள்ள தானாபதியூர் பேருந்து நிறுத்தம் பகுதியில் பிப்ரவரி 24ஆம் தேதி பொதுக்கூட்டம் நடத்தத் திராவிடர் விடுதலைக் கழகம் திட்டமிட்டிருந்தது.

இந்தக் கூட்டத்தை நடத்த சேலம் ஜலகண்டபுரம் காவல்நிலையத்தில் அனுமதி கேட்டுக் கடந்த பிப்.10ஆம் தேதி மனு அளிக்கப்பட்டது. ஆனால், சட்ட ஒழுங்கைச் சுட்டிக்காட்டியும், பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படும் என்று கூறியும் கூட்டம் நடத்த அனுமதி மறுத்து சேலம் ஜலகண்டபுரம் காவல்துறை அந்த மனுவை நிராகரித்தது.

இதை எதிர்த்தும், சேலத்தில் பொதுக்கூட்டம் நடத்த அனுமதி கோரியும் திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் சேலம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அன்பு சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார். இந்த வழக்கு நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ் முன்பு பிப்ரவரி 26 அன்று விசாரணைக்கு வந்தது.

அப்போது மனுதாரர் தரப்பில், சட்டம் ஒழுங்கு பிரச்சனையைக் காரணம் காட்டி, அடிப்படை போராட்ட உரிமைகளை நிறுத்தி வைக்க முடியாது எனத் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து, காவல்துறையின் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் வரும் மார்ச் 3ஆம் தேதி, சேலம் மேட்டூரில் உள்ள தானாபதியூர் பேருந்து நிறுத்தம் பகுதியில் திராவிடர் விடுதலைக் கழகம் பொதுக்கூட்டம் நடத்த அனுமதியளித்து நீதிபதி உத்தரவிட்டார்.

இவ்வழக்கில் கழகத்தின் சார்பில் சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திருமூர்த்தி நேரில் ஆஜராகி வாதாடினார் என்பது குறிப்பிடத்தக்கது.

அதனைத் தொடர்ந்து மார்ச் 3ஆம் தேதி தானாபதியூரில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றவுள்ளார்.

# பாஜக செய்த ஆட்சி கலைப்புகள்

சண்டிகர் மேயர் தேர்தலில் இந்தியா கூட்டணி வெற்றி பெறுவதை ஏற்றுக்கொள்ளாத பாஜக, தேர்தல் அதிகாரியாக பாஜகவைச் சேர்ந்தவரை நியமித்து தேர்தலை நடத்த வைத்தது. ஆம் ஆத்மி மற்றும் காங்கிரஸ் கூட்டணி அமைத்து போட்டியிட்டதால், பாஜக தோல்வி தேர்தலுக்கு முன்பே உறுதியானது. ஆனாலும், தேர்தல் அதிகாரி பாஜகவின் கவுன்சிலர் என்பதால் 8 வாக்குகள் செல்லாது என்று அறிவித்து பாஜக வெற்றி பெற்றதாக அறிவித்தார்.

கண்காணிப்பு கேமிராவில் தேர்தல் அதிகாரி அனில் மாஷி வாக்குச்சீட்டுக்களை திருத்துவது அப்பட்டமாக பதிவானது. உச்சநீதிமன்றம் இதைக் கடுமையாக கண்டித்ததுடன், அரிதினும் அரிதான வழக்குகளில் பயன்படுத்தக்கூடிய விதி 142-யைப் பயன்படுத்தி ஆம் ஆத்மி வேட்பாளர் வெற்றி பெற்றதாக அறிவித்தது. சண்டிகர் மேயர் தேர்தலில் உச்சநீதிமன்றம் வழங்கிய நீதியை 2016 ஆம் ஆண்டிலிருந்து பல மாநிலங்களில் பாஜக செய்த ஆட்சி கவிழ்ப்புகளுக்கும் வழங்கியிருந்தால், பாஜக ஆளும் மாநிலங்களின் எண்ணிக்கை குறைந்திருக்கும். தற்போது 12 மாநிலங்களில் நேரடியாகவும், 5 மாநிலங்களில் கூட்டணியுடனும் பாஜக ஆட்சி நடைபெற்று வருகிறது. இதுவரை பாஜகவுடன் கூட்டணி வைத்த 9 மாநில கட்சிகள் பலவீனம் அடைந்துள்ளன. அதாவது பாஜக அவற்றை உடைத்துள்ளது என்றும் கூறலாம். இந்த கட்சிகள் பலவீனம் அடைவதன் மூலம் அதன் வாக்குகளை பெறுவதும் பாஜகதான்.

**அருணாச்சலப் பிரதேசம் - 2016 :**

அருணாச்சல பிரதேசத்தில் மொத்த தொகுதி 60. 2016 ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தலில் காங்கிரஸ் 44 தொகுதிகளில் வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்தது. பாஜக வெற்றி பெற்றது வெறும் 11 தொகுதி. காங்கிரசின் நபம் தூகி முதலமைச்சராக பதவியேற்றார். ஆனால், காங்கிரஸ் எம்எல்ஏ கலிகோ புல்லை பாஜக வளைத்து கலகம் செய்ய வைத்தது. கலிகோ புல் 21 எம்எல்ஏ-க்களுடன் வெளியேறி பாஜக உதவியுடன் முதலமைச்சரும் ஆனார். ஆனால், உச்சநீதிமன்றம் தலையிட்டு நபம் தூகியையே முதல்வராக அறிவித்தது. இறுதியில் கலிகோ புல்லை பாஜக கைவிட்டது. பிப்ரவரி மாதம் பதவியேற்றுக் கொண்ட கலிகோ புல் ஆகஸ்ட் மாதம் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார். அதன்பின்னும் பாஜக அடங்கவில்லை. காங்கிரசில் முதலமைச்சராக இருந்த பீமா காண்டு 40 எம்எல்ஏ-க்களுடன் காங்கிரசில் இருந்து விலகி அருணாச்சல மக்கள் கட்சியில் இணைந்தார். பிறகு முழுவதுமாக பாஜகவிற்கு சென்று 2019 தேர்தலில் பாஜக சார்பில் போட்டியிட்டு தற்போது பாஜக முதலமைச்சராக தொடர்ந்து வருகிறார்.

**மணிப்பூர் - 2017 :**

மணிப்பூரில்உள்ள 60 தொகுதிகளில் 28 தொகுதிகளைக் கைப்பற்றியது காங்கிரஸ். பாஜக 21 இடங்களைத்தான் பெற்றது. ஆனால், ஆளுநர் அதிக இடங்களைப் பெற்ற காங்கிரஸை அழைக்காமல், பாஜகவை அழைத்து ஆட்சி அமைக்க கோரினார். நாகா மக்கள் முன்னணி, தேசிய மக்கள் கட்சி, லோக் ஜனசக்தி மற்றும் சுயேட்சையின் ஆதரவுடன் பாஜக ஆட்சிக்கட்டிலில் அமர்ந்தது. பிறகு காங்கிரஸ் கட்சியில் இருந்து ஷியாம்குமார் சிங்கை பாஜக இழுத்தது. பாஜக சார்பில் பிரேன் சிங் முதல்வரானார். அதைத் தொடர்ந்து, அடுத்தடுத்து ஏழு காங்கிரஸ் எம்எல்ஏ-க்கள் காங்கிரசில் இருந்து பாஜகவிற்கு தாவினர். இந்நிலையில் 2022-ஆம் ஆண்டு மணிப்பூர் சட்டமன்றத் தேர்தலில் 32 இடங்களில் அமோக வெற்றிபெற்ற பாஜக தனிப்பெரும்பான்மையுடன் தற்போது ஆட்சியில் உள்ளது.

**கோவா - 2017 :**

கோவா தேர்தலில் 40 தொகுதிகளில் 17 தொகுதிகளை காங்கிரஸ் வென்றது. பாஜக வெறும் 13 இடங்களில் மட்டுமே வென்றது. ஆனால், காங்கிரசில் இருந்து 12 எம்எல்ஏ-க்களை பாஜக தன் பக்கம் இழுத்து ஆட்சி அமைத்தது.

**மேகாலயா - 2018 :**

மொத்தமுள்ள 60 தொகுதிகளில் 21 இடங்களில் காங்கிரஸ் வெற்றி பெற்றது. இங்கு தேசிய மக்கள் கட்சி 19 இடங்களிலும் பாஜக வெறும் 2 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றன. தேசிய மக்கள் கட்சியை கைக்குள் வைத்துக் கொண்டு பாஜக ஆட்சியைப் பிடித்தது.

**சிக்கிம் - 2019 :**

மொத்தமுள்ள 32 இடங்களில் 17 தொகுதிகளை சிக்கிம் கிராந்திகாரி மோர்ச்சாவும், 15 இடங்களில் சிக்கிம் ஜனநாயக முன்னணியும் வெற்றி பெற்றன. பாஜக ஒரு இடங்களில் கூட வெற்றி பெறவில்லை. ஒரு இடத்தில் கூட வெற்றி பெற முடியாத பாஜக, சிக்கிம் ஜனநாயக முன்னணியில் இருந்து 10 எம்எல்ஏ-க்களை தன் பக்கம் இழுத்தது. அதன் பின் சிக்கிம் கிராந்திகாரி மோர்ச்சாவுடன் கூட்டணி அமைத்து பாஜக அங்கு முதன் முதலாக ஆட்சியை பிடித்தது. தற்போது சிக்கிம் சட்டப்பேரவையில் பாஜகவின் பலம் 12 ஆக உள்ளது. 2019 ஆம் ஆண்டு தேர்தலில் ஒரு தொகுதியைக் கூட வெற்றி பெற முடியாத பாஜகவிற்கு தற்போது 12 எம்எல்ஏ-க்கள் உள்ளனர்.

**கர்நாடகா - 2019 :**

2018ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் 104 இடங்களை பாஜக கைப்பற்றியது. காங்கிரஸ் 78 இடங்களையும், மதசார்பற்ற ஜனதா தளம் 37 தொகுதிகளில் வெற்றி பெற்றது. ஆனால் ஆளுநர் உடனடியாக பாஜகவை ஆட்சி அமைக்கஅழைத்தார். சட்டமன்றத்தில் நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்தி தோல்வியடைந்த பின்தான் எடியூரப்பா பதவி விலகினார். பிறகு, காங்கிரஸ், மஜத கூட்டணி ஆட்சி நடைபெற்றது. ஆனால், ஒரே ஆண்டில் காங்கிரசில் இருந்து 13 எம்எல்ஏ-க்களையும், மஜதவில் இருந்து 3 எம்எல்ஏ-க்களையும் இழுத்து, பாஜக ஆட்சி அமைத்தது.

**மத்தியப்பிரதேசம் - 2020 :**

2018ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் 114 இடங்களை வென்ற காங்கிரஸ், கூட்டணிக் கட்சிகளின் ஆதரவுடன் 121 எம்எல்ஏ-க்களுடன் கமல்நாத் தலைமையில் ஆட்சி அமைத்தது. ஆனால், 109 இடங்களை மட்டுமே வென்ற பாஜக காங்கிரசில் இருந்து ஜோதிராதித்திய சிந்தியா தலைமையில் 22 எம்எல்ஏ-க்களை இழுத்து ஆட்சி அமைத்தது.

**பாண்டிச்சேரி - 2021 :**

2016 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் காங்கிரஸ் 15 இடங்களிலும், திமுக 2 இடங்களிலும் வென்று கூட்டணி அமைத்து 4 ஆண்டுகள் 9 மாதம் ஆட்சி நடைபெற்றது. தேர்தலுக்கு 3 மாதங்களுக்கு முன்பு காங்கிரசின் இரண்டு அமைச்சர்கள் மற்றும் 6 எம்எல்ஏ-க்களை பாஜக வெளியில் இழுத்து ஆட்சியை கவிழ்த்தது. தற்போது பாஜகவிற்கு அங்கு 6 எம்எல்ஏ-க்கள் உள்ளனர். காங்கிரஸிற்கு 2 எம்எல்ஏ-க்கள் மட்டுமே உள்ளனர்.

**மகாராஷ்டிரா - 2022 :**

2019 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் பாஜகவும் சிவசேனாவும் இணைந்து போட்டியிட்டன. அதில் பாஜக 105 இடங்களை கைப்பற்றியது. அதனால் பாஜக முதல்வர் பதவியை உத்தவ் தாக்கரேவுக்கு விட்டுத் தர மனமில்லாமல் இருந்தது. கூட்டணியில் இருந்து வெளியேறிய உத்தவ் தாக்கரே, காங்கிரஸ் மற்றும் தேசியவாத காங்கிரஸுடன் கூட்டணி அமைத்தார். சிவசேனா 56, தேசியவாத காங்கிரஸ் 54, காங்கிரஸ் 44 என 154 இடங்கள் கிடைத்தன. ஆனாலும், பாஜகவின் பட்னாவிஸை ஆளுநர் ஆட்சி அமைக்க அழைத்தார். 4 நாட்களில் நம்பிக்கை வாக்கெடுப்பில் பாஜக ஆட்சி கவிழ்ந்தது. பிறகு மகா விகாஸ் அகாதி கூட்டணி 2 ஆண்டுகள் 213 நாட்கள் ஆட்சி செய்தது. பொறுத்துக் கொள்ள முடியாத பாஜக, சிவசேனாவின் ஏக்நாத் ஷிண்டே தலைமையில் எம்எல்ஏ-க்களை பாஜக பக்கம் இழுத்தது.

உத்தவ் தாக்கரே பதவி விலகினார். அதன்பின் கடந்த 2023 ஆம் ஆண்டு தேசியவாத காங்கிரஸின் அஜித் பவாரையும் இழுத்தது பாஜக. உத்தவ் தாக்கரே அரசின் மீது நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்த அப்போதைய ஆளுநர் பகத்சிங் கோஷ்யாரி உத்தரவிட்டார். இந்த உத்தரவை எதிர்த்து உச்சநீதிமன்றம் சென்றது சிவசேனா. இதற்கு 2023 ஆம் ஆண்டு மே மாதம் தீர்ப்பளித்த உச்சநீதிமன்றம், ஆளுநர் மற்றும் சபாநாயகரின் செயலைக் கண்டித்தது. ஆனால் சிவசேனாவின் சின்னம் மற்றும் கொடியைப் பயன்படுத்த உத்தவ் தாக்கரேவுக்கும், தேசியவாத காங்கிரஸ் கட்சியின் சின்னம் மற்றும் பெயரைப் பயன்படுத்த சரத் பவாருக்கும் தேர்தல் ஆணையம் தடை வழங்கி உள்ளது.

**பீகார் - 2017, 2024 :**

பீகாரில் நிதிஷ் குமார் கட்சி மாறி மாறி ஆட்சி அமைப்பது புதியது அல்ல. 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் லாலு பிரசாத் யாதவுடன் கூட்டணி அமைத்து முதலமைச்சரான நிதிஷ் குமார், 2017 ஆம் ஆண்டு அந்த கூட்டணியில் இருந்து வெளியேறி பாஜகவுடன் கூட்டணி அமைத்து முதலமைச்சரானார்.

2019ஆம் ஆண்டு பாஜகவுடன் கூட்டணி அமைத்து முதலமைச்சரான நிதிஷ் குமார், 2022 ஆம் ஆண்டு கூட்டணியில் இருந்து வெளியேறி, “இறந்தாலும் பாஜகவுடன் கூட்டணி அமைக்க மாட்டேன்” என்று கூறினார்.

இந்தியா கூட்டணியை உருவாக்குவதிலும் முன்னிலை வகித்தார். இந்நிலையில் இந்த ஆண்டு ஜனவரி மாதம் மீண்டும் ராஷ்ட்ரிய ஜனதா தள கூட்டணியை விட்டு விலகி மீண்டும் பாஜகவுடன் கூட்டணி அமைத்து முதலமைச்சராக பதவியேற்றுள்ளார்.

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

பெற்றார். இப்போது இவர்தான் எதிர்க்கட்சித் தலைவர்.

**பாபா சித்திக் :**



காங்கிரஸ் கட்சியை சேர்ந்த இவர் மகாராஷ்டிராவின் பாந்த்ரா தொகுதியில் 3 முறை எம்.எல்.ஏ.வாக இருந்துள்ளார். அதற்குமுன்பு வீட்டுவசதி மற்றும் பகுதி மேம்பாட்டு ஆணையத்தின் மும்பை வாரிய தலைவராக இருந்தபோது, குடிசைப் பகுதி சீரமைப்பு திட்டத்தில் பணமோசடி செய்ததாக அமலாக்கத்துறை விசாரித்தது. கடந்த மாதம் இவர் காங்கிரஸில் இருந்து விலகி, அஜித் பவாரின் தேசியவாத காங்கிரஸில் இணைந்த பிறகு விசாரணை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

பாஜகவில் இணைந்தால் ஊழல் குற்றச்சாட்டுக்கள் முன் தேதியிட்டு அழிக்கப்படும் என்ற அதிரடி ஆஃபருக்கு, இவர்களைப் போல இன்னும் பலர் இரையாகி இருக்கிறார்கள். பாஜகவைப் பொறுத்தவரை ஊழல் செய்வது தவறல்ல, எதிர்க்கட்சியில் இருந்துகொண்டு ஊழல் செய்வதுதான் தவறு.

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/22-24 licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/22-24
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# கழகத்தின் தெருமுனைக் கூட்டங்களுக்கு மக்களிடம் வரவேற்பு!

# சேலம், திண்டுக்கல், சென்னையில் முழுவீச்சில் பரப்புரை!

**சென்னை** : சர்வாதிகாரத்தை வீழ்த்துவோம்! சமூக ஒற்றுமையைக் காப்போம்! பரப்புரைக் கூட்டங்கள் வட சென்னை மாவட்டத்திற்கு உட்பட்ட தேனாம்பேட்டை திருவள்ளுவர் சாலை, சைதாப்பேட்டை கங்கையம்மன் கோயில் தெரு, சேத்துப்பட்டு அம்பேத்கர் திடல், மங்களாபுரம், ஓட்டேரி அஞ்சு லைட், ஜாயின்ட் அலுவலகம், அயன்புரம் உள்ளிட்ட இடங்களில் பிப்ரவரி 20 முதல் பிப்ரவரி 24 வரை நடைபெற்றது.

உமாபதி - பொன்ராஜ் குழுவின் அரசியல் நையாண்டி நிகழ்ச்சி மற்றும் ஈரோடு பேரன்புவின் ராப் இசை பாடல்களுடன் ஒவ்வொரு கூட்டமும் தொடங்கியது.

அதனைத் தொடர்ந்து கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், கழக இணையதளப் பொறுப்பாளர் விஜயகுமார், எட்வின் பிரபாகரன், அருண் கோமதி, பெரியார் நம்பி, மக்கள் அதிகாரம் காமராஜ், துணைவேந்தன் உள்ளிட்டோர் சிறப்புரையாற்றினர்.

மேற்கண்ட கூட்டங்களை வட சென்னை மாவட்ட அமைப்பாளர் சேத்துப்பட்டு இராசேந்திரன், தட்சிணாமூர்த்தி, ஏசு குமார், ராஜன் உள்ளிட்டோர் ஒருங்கிணைத்தனர்.

**திண்டுக்கல்** : சர்வாதிகாரத்தை வீழ்த்துவோம்! சமூக ஒற்றுமையைக் காப்போம்! 2024 நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு முதல்கட்ட பரப்புரை இயக்கம் திண்டுக்கல் மாவட்டத்தில் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

வேடசந்தூர் ஒன்றியத்திற்குட்பட்ட நவாமரத்துப்பட்டி, சுள்ளெறும்பு, சாலையூர், சித்தமரத்துப்பட்டி, சேனங்கோட்டை, விருதலைப்பட்டி, காசி பாளையம், கூம்பூரி, அலகாபுரி, விட்டல்நாயக்கன்பட்டி, வடமதுரை, தென்னம்பட்டி, எரியோட்டி, வேடசந்தூர் பேருந்து நிலையம், வேடசந்தூர் ஆத்துமேடு, திண்டுக்கல் மாநகருக்குட்பட்ட S.T. JOSEPH Hospital, தலைமை அஞ்சலகம், ரவுண்டு ரோடு, திண்டுக்கல் பேருந்து நிலையம் மற்றும் மணிக்கூண்டு உள்ளிட்ட இடங்களில் பிப்ரவரி 21 தொடங்கி பிப்ரவரி 24 வரை நான்கு நாட்கள் நடைபெற்றது.

அனைத்துக் கூட்டங்களிலும் சர்வாதிகாரி மோடி ஆட்சிக்கு முடிவு கட்டும் விதமாக சர்வாதிகாரம் வீழ்த்துவோம் என்கிற பாடலை தோழர் பெரியார், கபாலி இருவரும் விளக்கி பாடினார்கள்.

மாவட்ட அமைப்பாளர் மருதமூர்த்தி, முனைவர். உஷாராணி, ஆயக்குடி பேரூர் அமைப்பாளர் சங்கர், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் மாக்சிம் கார்க்கி, மாவட்ட இணையதள பொறுப்பாளர் ராஜா, தமிழ்நாடு மாணவர் கழக ஆயுதன் ஆகியோர் மோடி ஆட்சியில் பறிபோகும் மாநில உரிமைகள் - சிறுபான்மையினருக்கு எதிரான வெறுப்புப் பேச்சுகள் உள்ளிட்ட பல்வேறு தகவல்களை மக்கள் மத்தியில் அம்பலப்படுத்தினர்.

பயணத்தில் தேனி ராயன், நத்தம் குமார், தங்கமுத்து, சுரேகா, மீனாலட்சுமி, சூர்யா, லோகேஷ், அலெக்ஸ், இளம்பரிதி, ஆரியா, லல்லு பிரசாத், சந்தோஷ் துர்க்கைராஜ், குமார், ஜெயசங்கர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

**சேலம்** : சர்வாதிகாரத்தை வீழ்த்துவோம்! சமூக ஒற்றுமையைக் காப்போம்! பரப்புரைக் கூட்டம் 24.02.2024 அன்று சின்னப்பம்பட்டி, மகுடஞ்சாவடி, இளம்பிள்ளை பேருந்து நிறுத்தம், சித்தர்கோவில் உள்ளிட்ட இடங்களில் நடைபெற்றது.

இளம்பிள்ளை கோபி - திவ்யா ஆகியோரின் "சர்வாதிகாரம் வீழ்த்துவோம்" என்ற பரப்புரைப் பாடலுடன் கூட்டம் தொடங்கியது.

கூட்டத்திற்கு கழக சேலம் மாவட்ட அமைப்பாளர் முத்துமாணிக்கம் தலைமை தாங்கினார், இளம்பிள்ளை கோபி வரவேற்புரையாற்றினார், இளம்பிள்ளை நகரத் தலைவர் ரமேஷ், தமிழ்மணி, அசோக், தனசேகர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சேலம் மாவட்ட அமைப்பாளர் ஏற்காடு பெருமாள், சேலம் கிழக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஏற்காடு தேவபிரகாஷ், கே.ஆர். தோப்பூர் கண்ணன், தமிழ்நாடு மாணவர் கழக வழக்கறிஞர் செல்வகுமார், ஏற்காடு நித்யஸ்ரீ, இளம்பிள்ளை திவ்யா ஆகியோர் பரப்புரைக் கூட்டத்தின் நோக்கத்தை விளக்கி கருத்துரையாற்றினர்.

நிறைவாக சேலம் கிழக்கு மாவட்ட இளைஞரணி தலைவர் தங்கதுரை நன்றி கூறினார். கூட்டத்தில் சேலம் கிழக்கு மாவட்டத் தலைவர் சக்திவேல், சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் டேவிட், இளம்பிள்ளை பகுதி அசோக், ரமேஷ், தங்கதுரை, முத்துமாணிக்கம், திவ்யா, கோபி, சேகர், கவியரசு, நங்கவள்ளி பகுதி கிருஷ்ணன், பிரபாகரன், மேட்டூர் முத்துராஜ், ஏற்காடு பெருமாள், தேவா, செல்வமூர்த்தி, நித்யஸ்ரீ, ஜாஸ்மின்ஸ்ரீ, தமிழ்நாடு மாணவர் கழக செல்வா, பார்த்திபன், காவேரி, செல்வம், தமிழ்மணி, நிலா, தமிழ், நிலவன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## வேலையில்லா கொடுமை; உயிரை இழக்கவும் துணியும் இந்தியர்கள்!

உத்தரப் பிரதேச இளைஞர்களை சில விதிகளைத் தளர்த்தி இஸ்ரேலுக்கு வேலைக்கு அனுப்பியிருப்பதாக கடந்த மாதம் செய்திகள் வெளியாகின. பாலஸ்தீன படைகளுக்கும் இஸ்ரேலுக்கும் இடையே சண்டை நடக்கும் சூழலில் இது தேவைதானா என அப்போதே விமர்சனங்கள் எழுந்தன. இப்போது, நூற்றுக்கணக்கான இந்தியர்கள் கடந்த ஓராண்டில் ரஷ்ய ராணுவத்தில் சேர்க்கப்பட்டிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. கடந்த 2 ஆண்டுகளாக உக்ரைன் மீது ரஷ்ய படைகள் தாக்குதல் நடத்திக் கொண்டிருக்கிறது. இருதரப்பிலும் இழப்புகளும் தாக்குதல்களும் தொடரும் வேளையில் இந்தியா, பாகிஸ்தான், வங்க தேசம், உஸ்பெகிஸ்தான், கிர்கிஸ்தான் உள்ளிட்ட நாட்டவரையும் தங்கள் நாட்டு ராணுவத்தில் ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக் கொண்டிருக்கிறது ரஷ்யா. உக்ரைன் மீதான போர் காரணமாக ரஷ்ய படையில் சேர அந்நாட்டு இளைஞர்கள் தயக்கம் காட்டுவதாக கடந்த ஆண்டில் செய்திகள் வெளியாகியிருந்தன. அதனைத் தொடர்ந்து கடந்த 6 மாதங்களாகவே இதுபோல வெளிநாட்டு இளைஞர்களுக்கு பயிற்சி கொடுத்து தங்கள் நாட்டு ராணுவத்தில் சேர்த்துக் கொண்டிருக்கிறது ரஷ்யா.

விடுமுறை இல்லை, வெளியேற வேண்டுமானால் 6 மாதங்களுக்கு முன்பே தெரிவிக்க வேண்டுமென்ற கெடுபிடிகளும் விதிக்கப்பட்டிருக்கிறது. சிலரது கடவுச் சீட்டுக்கள் பறிமுதல் செய்யப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது. இப்படி சேர்க்கப்படும் வெளிநாட்டு இளைஞர்களுக்கு பயிற்சி கொடுத்து, அவர்களை உக்ரைனுக்கு அனுப்ப ரஷ்யா திட்டமிட்டிருக்கிறது என குற்றச்சாட்டுக்கள் எழுந்தன. ரஷ்ய தரப்பில் இதனை மறுத்திருந்தனர். ஆனால் குஜராத்தைச் சேர்ந்த 23 வயது இளைஞர் ஒருவர் உக்ரைனின் டொனெட்ஸ்க் பகுதியில், போர்த் தாக்குதலில் கொல்லப்பட்டிருக்கிறார். சூரத் நகரைச் சேர்ந்த ஹெமில் அஷ்வினிபாய் என்ற இளைஞர், கடந்த ஆண்டு டிசம்பரில் பணியில் அமர்த்தப்பட்டிருக்கிறார். போர்க் களத்தில் இருந்து தனது மகனை மீட்டுத்தர வேண்டுமென ஹெமிலின் தந்தை சில வாரங்களுக்கு முன் கோரிக்கை விடுத்திருந்தார். ஆனால் ஒன்றிய அரசோ அதனை பொருட்படுத்தவில்லை.

அவர் மட்டுமல்ல, ஜம்மு காஷ்மீரில் இருந்து சென்ற ஒருவர், "பயிற்சியின்போது தனக்கு அடிபட்டு ஓய்வில் இருக்கிறேன். எங்களை போர் நடக்கும் பகுதிக்கு அனுப்ப திட்டமிட்டிருக்கிறார்கள். எவ்வளவு முயன்றும் இந்தியத் தூதகரத்தை தொடர்புகொள்ள முடியவில்லை" என வீடியோ வெளியிட்டிருந்தார். அதற்கும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. தற்போது கொல்லப்பட்ட ஹெமில் அஷ்வினிபாய் இருந்த பகுதியில் மேலும் சில இந்தியர்கள் பாதுகாப்பு உதவியாளர்களாக பணியில் இருக்கின்றனர் என கர்நாடகாவை சேர்ந்த சமீர் அகமது என்பவர் உறுதி செய்துள்ளார். அவரும் அங்குதான் இருக்கிறார். நரேந்திர மோடி ஆட்சியில் வேலை கிடைக்காத அவலத்தில், போர்க்களமாக இருந்தாலும் பரவாயில்லை என இளைஞர்கள் செல்லத் துணிந்திருக்கின்றனர். கொலைக்களமாக இருந்தாலும் பரவாயில்லை, வேலைக்கு அனுப்பி வைக்கிறோம் என அனுப்பிக் கொண்டிருக்கிறது பாஜக அரசு.

## பெரியார் பல்கலை. பதிவாளர் மீது நடவடிக்கை எடுக்கலாம்

நிதி முறைகேடு புகார் தொடர்பாக சேலம் பெரியார் பல்கலை. பதிவாளர் தங்கவேல் மீது நடவடிக்கை எடுக்கலாம் என்று சென்னை உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது. சேலம் பெரியார் பல்கலை.யில் 5 ஆண்டுகளுக்கும் மேலாக பொறுப்புப் பதிவாளராக பணியாற்றி வருபவர் தங்கவேல் (60) பல்கலை நிதியை களவாடியது உள்பட அவர் மீதான 8 குற்றச்சாட்டுகளில் உண்மை இருப்பது விசாரணையில் தெரிய வந்தது. இதையடுத்து அவரை உடனடியாக பணியிடைநீக்கம் செய்யும்படி உயர்கல்வித்துறை முதன்மைச் செயலாளர் கார்த்தி, பெரியார் பல்கலை துணைவேந்தர் ஜெகநாதனுக்கு பரிந்துரை செய்தது.

உயர்கல்வித்துறை பரிந்துரையை எதிர்த்து தங்கவேல் தொடர்ந்த வழக்கு நீதிபதி இளந்திரையன் முன்பு விசாரணைக்கு வந்தது. இரு தரப்பு வாதங்களை கேட்ட நீதிபதி ,"உயர்கல்வித்துறை பரிந்துரை மீது பெரியார் பல்கலை. எடுத்த நடவடிக்கை என்ன?. உயர்கல்வித்துறை பரிந்துரை செய்தும் பல்கலை. பதிவாளர் தங்கவேலை சஸ்பெண்ட் செய்யாதது ஏன்? உயர்கல்வி செயலாளரின் பரிந்துரை மீது நடவடிக்கை எடுக்காமல் துணைவேந்தர் ஜெகநாதன் அரசிடம் விளக்கம் கேட்டது ஏன்?,"இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

இதையடுத்து, நிதி முறைகேடு புகார் தொடர்பாக சேலம் பெரியார் பல்கலை. பதிவாளர் தங்கவேல் மீது நடவடிக்கை எடுக்கலாம் என்று தெரிவித்த உயர்நீதிமன்றம், விசாரணை அறிக்கையை தாக்கல் செய்ய தமிழ்நாடு அரசுக்கு உத்தரவிட்டது. அத்துடன், வழக்கை விசாரித்த நீதிபதி இளந்திரையன், இதில் கூட்டுச்சதி உள்ளதாகவும் வழக்கு தொடர்பாக மார்ச் 14-ம் தேதி உத்தரவு பிறப்பிக்க உள்ளதாகவும் தெரிவித்தார். ஆர்.எஸ்.எஸ். கூடாரமாக மாறிக் கொண்டிருக்கும் பெரியார் பல்கலை.யில் நிதி மோசடிகளால் நிர்வாகம் பாதிக்கப்படுவதை தடுக்க ஐ.ஏ.எஸ். அதிகாரியை நியமித்து பணிகளை தொடர வேண்டுமென்று கழகத் தலைவர் கோரிக்கை விடுத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted March 01, 2024

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran